RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s22272

# பெண் படைப்பாளிகளின் படைப்பில் பெண்ணின் இருப்பு

**செ. ஹேமலதா** [அ, *]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 32, தமிழ்நாடு, இந்தியா

# Presence of woman in the literary works of women writers

**S. Hemalatha** [a, *]

[a] PG Tamil & Research Department, Chellammal Womens College, Guindy, Chennai -32, Tamil Nadu, India

* Corresponding Author: lhhemalatha28@gmail.com

Received: 26-09-2022
Revised: 30-10-2022
Accepted: 03-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

In this era where short story genre is spreading and increasing, most of the women writers have mentioned the presence of women in their literary works. Women hold an indispensable place in this society, but it can be seen that they suffer mentally and physically which are also reflected in the short stories of women writers. Tamil literature, to this day continues to express life or lifestyle. In this way, in the short story genre, the essence of the story is to depict a small part of life or a small event. Although women writers choose the plot of the story like other writers, the reason for the presence of woman is because they themselves are women. Women writers reveal the sufferings and the injustices against women albeit they emphasize their pleasures to a lesser extent. A man and a woman come together. They also bring out the evils of women working against women. Women writers bring out the frustrations of women psychologically and casually. Women writers bring out the injustices against women in every era, how the family and society she depends on are responsible for her wrong decisions, and also insist that women too have heart, longings and expectations through the female characters in their short stories. A woman suffers in every phase of her life because of her dependents, the social view that women are the only ones to make mistakes, and she tries to escape from it, and finally the situations where life itself is questioned, and the crimes committed by men depend on women. Let's explore the presence of women in the works of women writers through the collection called "Meethamirukum Sorkal".

**Keywords:** Women presence, Society, Family, Mood, Patriarchy

## முன்னுரை

அனைத்து துறைகளிலும் சாதித்துவரும் பெண்கள் இலக்கியத்துறையிலும் முத்திரை பதித்துள்ளனர். இலக்கியங்கள் அவையெழும் காலச்சூழலினை பிரதிபலிக்கும் என்பர். அக்கூற்றிற்கு ஏற்ப பெண் எழுத்தாளர்கள், தாங்கள் வாழ்ந்த காலகட்டத்தின் நிலையிலேயே சிறுகதை இலக்கியங்களின் கதைக்கருவாகக் கொண்டுள்ளனர். அதுமட்டுமன்று பெண் படைப்பாளர்களின் சிறுகதைகள் பெரும்பாலானவை பெண்ணை மையப்படுத்தி அமைகின்றன. அச்சிறுகதைகளில் தன்னினத்தைச் சார்ந்த பெண்களின் எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், அவர்களுக்கெதிரான கொடுமைகள் போன்றவற்றை வெளிப்படுத்துகின்றனர். எனவே பெண்ணின் இருப்பு பெண் படைப்பாளர்களின் செல்நெறியாக அமைகின்றது. ஆணுக்கு இணையாக பெண்கள் கருதப்படும் இச்சூழலிலும் பெண்களின் நிலை முற்காலச் சாயலோடு அவ்வப்போது நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன. 1930 முதல் 2014

வரையிலான பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளை மீதமிருக்கும் சொற்கள் எனும் தொகுப்பாக அ.வெண்ணிலா அவர்கள் தொகுத்துள்ளார். அத்தொகுப்பின் வழி பெண் படைப்பாளர்களின் சிறுகதை இலக்கியங்களில் பெண்ணின் இருப்பை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்

பெண் பிறந்தது முதல் பெற்றோர் அல்லது உடன்பிறப்புகளைச் சார்ந்து வாழ்கிறாள். திருமணம் செய்துகொடுக்கப்பட்ட பின் கணவனைச் சார்ந்து வாழ்கிறாள். முதுமையில் தன் குழந்தைகளைச் சார்ந்து வாழ்கிறாள். ஆனால் இவற்றிற்கிடையே அவள்படும் துன்பம் பல. பலர் பெண் குழந்தை பிறந்தால் துன்பப்படுகின்றனர். அவள் பருவம் எய்தியவுடன் அவளது சுதந்திரம் பறிபோகிறது. திருணத்திற்கு வரதட்சனை என்று அவளை விலைபேசுகின்றனர். கணவன் அமைவதைப் பொறுத்து அவளது வாழ்க்கை அமைகிறது. மேலும் அவளது பாதுகாப்பு இன்றியமையாத தேவையாகிறது. பெண் தனது வாழ்க்கை போராட்டத்தில் வெற்றி பெறுவதும், தோல்வியடைவதும் அவள் சார்ந்து வாழ்கின்றவர்களின் தன்மையைப் பொறுத்தமைகிறது.

## பெண் சிசுக்கொலை

பெண் குழந்தைப் பிறந்தால் அவளை வளர்த்து வரதட்சணைத் தந்து திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற சூழலில் அக்குழந்தையை கொல்லும் வழக்கம் இருந்தது. "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா..." (Dasiga Vinayagam Pillai, 1960) என்று பாடிய இதே திருநாட்டில்தான் பெண் சிசுக்கொலையும் நடந்திருக்கிறது. பெண்களே பெண்குழந்தைக்கு எதிராக செயல்பட்டு பிறந்த குழந்தையை கொல்வதாக நஞ்சு என்ற சிறுகதை அமைகிறது. தனக்கு பெண் குழந்தை பிறந்ததை அறிந்து அதை கொல்ல வரும் ரங்கமணி என்ற பெண்ணை பார்த்து.

"பீதியுடன் ஐயோ, வாணாம் போயிரு, போயிரு என்றாள்" அப்பெண்ணின் தாயோ "அடி சும்மா இரு என்று அவளது அம்மா அவள் வாயைப் பொத்தினாள். உன் புருஷன் என்ன சொல்லி அனுப்பிச்சான்னு நினைச்சுப் பார்த்துக்க என்றாள். அடிக்குரலில் பொட்டையோடு வந்தா உள்ளே சேர்க்க மாட்டேன்னு சொல்லல்லே" என்றாள் (Vennila, 2014).

இதில் பெண்ணின் தாயும், ரங்கமணி என்ற பெண்ணும் தன்னினத்திற்கு எதிராக செயல்படுவதைக் காணலாம். ரங்கமணி என்பவளை

"பிள்ளை பிறப்பு சமயத்தில் உதவியா இருப்பா, கல்யாணம் கட்டிக்காத ஒண்டிக்கட்டை" "அனாதைப் பொணம், வரதட்சணை கொடுக்க வக்கில்லாதவளை எவன் கட்டிக்குவான்" என்று விவரிக்கிறார் ஆசிரியர் (Vennila, 2014).

"பிள்ளையை பெத்துக் குடுக்கிறவரைக்கும் நா பெத்துக்கிட்டே இருக்கணும் ரங்கமணி - வருஷா வருஷம் - வேற வழியில்லை" என்றும் "இல்லேன்னா அவுக வேற பெண்ணைக் கட்டிக்குவாக" (Vennila, 2014) என்ற ஒரு பெண்ணின் இயலாமையையும் ஆணாதிக்கத்தைக் காட்சிப்படுத்துகிறது. தன்னை ஈன்றுத்தர பெண் வேண்டும். தனக்கு குழந்தையை ஈன்றுத் தர பெண் வேண்டும். ஆனால் தனக்கு பெண் குழந்தை வேண்டாம் என்ற ஆணாதிக்க மனோனிலையையும் காணமுடிகிறது. இறுதியாக ரங்கமணி பிறந்த ஒரு ஆண்குழந்தையை கொன்றுவிட்டு தலைமறைவாகிறாள். அவளை அக்குழந்தையின் தந்தையும் சுற்றமும் தேடிவருவதாக கதை முடிவடைகிறது. அதே ஆணின் பெண் குழந்தைகளை கொல்லும்போது அவரும், அவரது சுற்றமும் பணம் தந்து அனுப்பினர். கருவில் இருக்கும் குழந்தை எக்குழந்தையாக இருந்தால் என்ன, அதை அறிந்துகொள்ள ஏன் துடிக்கின்றனர். 1994 ல் கொண்டுவரப்பட்ட பிறப்பதற்கு முன் கண்டறிதல் தடைச்சட்டம்தான் அவர்களின் துடிப்பிற்கு தடையாகிறது. இதன்மூலம் இன்றளவும் சமுதாயத்தில் முற்கால சாயல் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. ஆணாதிக்க சமூகத்தில் பெண்களின் இருப்புகள் இச்சிறுகதையில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## வண்ணமும் பருவமும்

பெண் குழந்தை தன் பெற்றோரின் அரவணைப்பில் அன்புடன் வளர்ந்து வரும்பொழுது உரிய வயதில் பருவம் எய்துதலான பூப்பெய்துதலே அவளது பெண்மையை அடையாளப்படுத்துவதாகிறது. பருவம் எய்துதல் என்றால் என்ன என்பதறியாத சிறு பெண் தன் தாயிடமே ஆதரவை நாடும். தாயின் அரவணைப்பில் அச்சிறு பெண்ணின் பயம் நீங்கிவிடும். அவ்வகையில் ஒரு சிறு பெண் அவளது தாய் ஊருக்குச் சென்றபோது பருவம் எய்துகிறாள். அவளது சகோதரி அவளை சிடுசிடுக்கிறாள். அவளுக்கு செய்ய வேண்டியவற்றை அவளே முன்னின்று செய்துவிடுகிறாள். அச்சிறுபெண்ணின் மனமோ அவளது தாயின் அரவணைப்பைத் தேட, தாய் வருகிறாள்.

“உனக்கு இந்த இழவுக்கு என்னடீ அவசரம்? இது வேற இனிமே ஒரு பாரம்” (Ambai, 1944) என்று கூற அச்சிறுபெண் இதுவரை தாயிடம் உணர்ந்த அரவணைப்பு அற்றவளாகிவிடுகிறாள்.

“இனிமே எல்லாம் நான் மரத்துலே ஏறக்கூடாது?” “இனிமே பாத்ரூமிலேயே ட்ரஸ் பண்ணிக்கணும் தெரிஞ்சதா?” (Ambai, 1944) என்ற கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டபோது அவள் மனம் உடையவில்லை. தாயின் சொற்கள் அவளது மனதினை கொலை செய்ததுபோல் சிறுபெண் உணர்கிறாள். இதுவரை அன்புடன் தன்மகளை அரவணைத்து வளர்த்த தாய் கோபம் கொள்ள காரணம் - சிறுமியின் சித்தியின் மகளுக்கு பெண் பார்க்க வருவதால்தான் அவளது தாய் ஊருக்கு சென்றிருந்தாள். அவளது சித்தி மகள் கருப்பு நிறமாதலால் வேண்டாம் என்று கூறிவிட்டனர். அச்சிறுமியும் கருப்பு நிறமாதலால் அவள் கோபத்தில் சொற்களை உதிர்த்தாள். அன்பு, பண்பு, அரவணைப்பு முதலிய பெண்ணுக்குரிய இன்றியமையாத குணங்களைவிட, அவளது அழகு, நிறம், வரதட்சணை முதலியவற்றையே ஆண்கள் விரும்புகின்றனர். ஒரு பெண் பூப்பெய்தியபோதே அவளது எதிர்கால வாழ்வினைக் குறித்து அவளது பெற்றோருக்கு குறிப்பாக தாய்க்கு அச்சம் ஏற்படத் தொடங்கிவிடுகிறது. பெண்கள் பல துறைகளில் சாதித்து வந்தாலும் இன்றைய சூழலிலும் பெண் பருவம் எய்தியவுடன் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுக்கொண்டுதான் உள்ளன. அக்கட்டுப்பாடுகளை எதிர்த்து போராடுபவர்கள் சிலரே.

## திருமணமும் வரதட்சணையும்

ஆண், பெண் என்ற இருவரின் இல்வாழ்விற்கு அடித்தளமாக அமைவது திருமணம். பெண்ணை திருமணம் செய்துகொடுக்கும் பெற்றோர், அவளது எதிர்காலம் கருதி சீர்களை வழங்கிவந்தனர். பிற்காலத்தில் அதுவே வியாபாரமாகிவிட்டது. பெண்ணை விலைபேசி பெற்றோர்கள் திருமணம் செய்து வைக்கும் நிலை உருவாகிவிட்டது. “திருமணம் இன்றி ஓர் ஆணோ, பெண்ணோ இறக்கக் கூடாது என்று எண்ணுமளவுக்குச் சமுதாயத்தில் திருமணம் புனிதமாகக் கருதப்படுவதால் பெற்றோர் தம் குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதைத் தமது தலையாய கடமையாகக் கருதுகின்றனர்” பணம் அனைவரின் தேவையானதனால் கொண்ட காதலையும் மறந்து வரதட்சணைக்காக எட்டுவயது பெண்ணை மணந்த ஆண், ஏழு வருடம் வெளிநாட்டில் படிப்பு முடித்துவிட்டு நாடு திரும்பி தன் மனைவியுடன் வாழ்வை ஆரம்பிக்க தொடங்கிய முதல்நாள் அவள் குருடி என்பதறிந்து தன் தாயிடம்,

“போதும்! பணம் பணம் என்று எனக்குப் புதிய ஆசையை உண்டாக்கிப் பணக்கடலில் என்னைத் தள்ளினாய். ஆனால் அக்கடலில் ஆனந்தமளிக்கக் கூடிய நல்முத்து, பவழம், சங்கு முதலியன இல்லாமல் பெரிய திமிங்கிலம் இருந்து சந்தோஷத்தையே விழுங்கிவிட்டது. அம்மா! சுபாஷிணியை மறந்துவிடு, ஏழை, பிச்சைக்காரி, இக்காலத்தில் பணந்தான் பிரதானம் என்று சொன்னாயே, சுபாஷிணிக்குத் துரோகம் செய்து சரியாகப் பலித்தது. நீ தேடிப் பிடித்த பெண் பிறவிக் குருடு.. இரு கண்களுமற்ற பாவை என்றான்.”

அவன் காதலியோ தாயின் வற்புறுத்தலால் மற்றொருவனை மணக்கிறாள். வழக்கத்திற்கு மாறாக மணமகன் வீட்டார் வரதட்சணைத் தருகின்றனர். மணமேடையில்

“கல்யாண மாப்பிள்ளைக்குக் காக்காய் வலிப்பு வந்து விலுவிலுவென்று உதைத்துக்கொண்டு கோரமாயும், பயங்கரமாயும் கூச்சலிட்டுக் கீழே விழுந்துவிட்டான். வாயில் நுரை நுரையாகத்

தள்ளுகிறது” அப்பொழுதுதான் பெண்ணின் தாய்க்கு அது தெரியவருகிறது. கடன் தீர்க்க பணத்தேவையால் காக்காய் வலிப்புக்காரனை மகளுக்கு கட்டி வைத்துவிட்டோமே என அழுகிறாள்.

மற்றொரு சிறுகதையில் பெண் பார்க்க வந்தவர்களிடம் வரதட்சணையாக ஏழாயிரம் தருவதாகவும், அவர்கள் தன் மகனை படிக்க வைக்கும் செலவை ஏற்கும்படியும், அல்லது வரதட்சணை ஏழாயிரத்தில் இரண்டாயிரம் குறைத்துக்கொள்ளும்படியோ பெண்ணின் தந்தையார் கேட்கிறார். அதற்கு பெண்பார்க்க வந்தவனின் தாயார்

“என்னமோ லட்ச ரூபாய் பாழாப் போறாப் போத்தான். ஒத்துண்டது பிச்சைக்காசு ஏழாயிரம். அதில் போய் இன்னும் ரெண்டாயிரம் குறைச்சுக்கணுமாமே! அப்படியிருந்தா இந்த சம்பந்தமே. என்று பிள்ளையின் தாய் பேசி முடிக்கவில்லை.”

அதற்குள் அவனது மகனுக்கு பெண்ணைப் பிடித்துவிட்டதால் சம்மதித்துவிட்டு நாள்குறிக்க சொல்லிச் சென்றுவிட்டனர். பெண்ணோ அங்கு நடக்கும் விடயங்களை அருகிலிருந்தும் காணாதது போல் இருந்தாள். அவளது தாய் அவர்கள் சென்றவுடன் தன் கணவனை நேருக்கு நேர் நிமிர்ந்து காண “என்னை அப்படிப் பார்க்காதே, எனக்கு கௌரவ நரகம் காத்துண்டிருக்கு, தெரியும்” என்று கூறி நகர்ந்துவிட்டார். ஏனெனில் எவ்வித நோய்நொடியும் அற்ற தன் மகளை கால் ஊனமுற்ற ஒருவனுக்கு வறுமையால் திருமணம் செய்து தருகிறாரே தன் கணவர் என்ற கோபம், தன் மகள் எதிர்த்து ஒரு வார்த்தையும் பேசவில்லையே என்ற நிலை என மௌனமாகிப்போனாள் பெண்ணின் தாய். தன் குடும்பச் சூழல் என்று அமைதியானாள் மகள். என் வருமானம் அவ்வளவுதான் என துக்கத்தால் வாயடைந்தார் பெண்ணின் தந்தை.

“வல்லமை பேசியுன் வீட்டில் பெண்

வாங்கவே வந்திடு வார்கள் சிலபேர்கள்

நல்லவிலை பேசுவார் உன்னை

நாளும் நலிந்து சுமந்து பெற்றோர்கள்” (Balasubramaniyan, 1986)

என்ற வரிகளுக்கு ஏற்ப திருமணம் என்றால் வரதட்சணையும் இயல்பானதாகிவிட்டது. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டும் இன்றளவும் நடைமுறையிலுள்ளது. தானும் ஒரு பெண் என்பதை மறந்து வரதட்சணைக் கேட்கும் ஆண்மகனின் தாய்மார்கள்.

திருமணத்தின்போது செய்த சீர்கள் போதாதென்று பிறகும் பெண்களுக்கு சீர்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் மணமகன் வீட்டாரை அழகுற படம்பிடித்துக்காட்டும் சிறுகதைகளாக கார்த்திகைச் சீர், நீர் ஊற்று விளங்குகின்றன.

பெண்ணின் அழகைக் கண்டு மயங்கி, அவர்களால் முடிந்த சீரைசெய்ய, அதையேற்று மணந்துகொண்ட கமலாவின் கணவன், இரண்டு வருடங்களில் அவன் குடும்பத்தாரால் பல இன்னல்களுக்கு ஆளானாள். உன் வீட்டிற்கு சென்று சில தினம் இருந்துவிட்டு வா என்று கமலாவை அவன் கணவன் அனுப்பிவைத்தான். பிறகு கடிதம் மூலம் ஏற்கனவே கேட்ட கூஜாவையும், இப்போது நான்கு சவரன் வளையலும் வேண்டும் என்று எழுதியனுப்பினான். அதைக் கண்டு கமலா திகைத்தாள்.

“கூஜாவும் கிடையாது. வளையும் செய்து போட முடியாது. இஷ்டம் இருந்தால் பெண்டாட்டியை அழைத்துக் கொள்ளட்டுமே. இல்லாவிட்டால் இருந்துவிட்டுப் போகிறாள். இங்கே” என்றும், “ஒரு சல்லி புரட்ட முடியாது. வாங்கிய கடனே இன்னும் அடையவில்லை” என்று கோபத்துடன் கூறினார். இவ்வாறு கணவன் வீட்டார் ஒரு புறமும், பெற்ற தந்தையொரு புறமும் கமலாவை துன்புறுத்த, அவளது தாய் மட்டும் அவளுக்கு ஆதராவாகப் பேசினாள். ஆனாலும் கமலா துன்பத்தினால் வருந்தி, வருந்தி காய்ச்சலால் இறக்கும் நிலைக்கு போனாள். பிறகு பேசியவாறே அவளது கண்கள் மூடிவிட்டன. அதைக் கண்டு அவளது தாய்.

“கடன் கடன் என்று வதைத்து எடுத்தீர்கள். குழந்தை உயிரையே விட்டுவிட்டாள் போங்கள்” என கணவனையே நொந்துக்கொண்டாள். மருத்துவர் அவள் உயிருடன் இருப்பதாகக் கூறியதும்தான்

அனைவருக்கும் நிம்மதியானது. பிறகு அவளது தந்தை அவள் கேட்ட சீர்கள் அனைத்தையும் செய்து அவள் கணவனுடன் ஊருக்கு அனுப்பும்போது

"எப்படியோ எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாயே அம்மா! பிழைத்துக்கிடந்தால் இந்த வளைதானா பிரமாதம்" என்றார். கமலாவின் இறந்த நிலையிலான களைப்பு, அவரது கல்மனதையும் பிளந்து அதனுள் ஈரம் கசிந்தது என கதை முடிவடைகிறது (Vennila, 2014).

ஜானகி தனது புகுந்தகத்தில் இல்லாமல், தனது பிறந்தகத்தில் இருப்பதற்குக் காரணம் கார்த்திகைச் சீர். அவளது அண்ணிக்கோ, செய்ய வேண்டிய சீரையெல்லாம் அவளது அண்ணன்கள் செய்துக்கொண்டிருந்தனர். ஜானகிக்கோ தரவேண்டிய சீரைப் பற்றிய எண்ணம் அவளது தாய், தந்தை, அண்ணனுக்கு ஏற்படவில்லை. எனவே சதாசர்வ காலமும் அவள் அழுதவண்ணம் இருந்தாள். அதனால் அவளது தாய், தந்தையர் அவளை வெறுத்தனர். அன்றும் அவளை எழுந்து தயாராகச் சொல்ல,

"ஆமாம், அம்பாளுக்கு விளக்கேத்திப் புஷ்பம் சாத்தி நமஸ்காரம் பண்ணிவிட்டால் என் மாமியார் அழைச்சிண்டு போயிடுவா இல்லே! அவா கேக்கும் அந்தக் கார்த்திகைச் சீரை செய்ய அப்பாவுக்கு மனசு வரல்லே. உனக்கும் அதுக்கு மேலே இருக்கு"

இவற்றையெல்லாம் கவனித்து வந்த ஜானகியின் அண்ணி, தன் சகோதரன் அன்று கொண்டுவந்த சீர்களையெல்லாம் காண்கிறாள். அவளுக்கு ஜானகியை எவ்வாறேனும் அவளது புகுந்தகத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டாள் அவளது துன்பம் தீரும் என்றறிந்தாள். அவளது சகோதரன் தந்த சீரையும், கணவனிடம் தந்த ஐநூறு ரூபாயையும் அவளுக்குத் தந்துவிடலாம் என்று அவள் வற்புறுத்தியதால் அவளது கணவனும் ஒத்துக்கொண்டு, அவள் கூறியபடியே சீர் எடுத்துக்கொண்டு, தன் மனைவி, தங்கை, தாயை அழைத்துக்கொண்டு தன் தங்கை ஜானகியின் மாமியார் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவர்கள் வந்ததைக்கண்டு உள்ளே சென்ற ஜானகியின் மாமியாரிடம் நீங்கள் கேட்ட சீர் கொண்டுவந்துள்ளோம் என்றவுடன்

"ஜானகியின் மாமியார் தட்டுத் தட்டாய் வைத்திருக்கும் சீரையும், வெள்ளிப் பாத்திரங்களையும் பார்த்து மகிழ்ந்தவளாய் எல்லோரையும் அன்புடன் வரவேற்றாள்"

வரதட்சணை தராததால் வாருங்கள் என்று கூட அழைக்காத மாமியார், சீர் கொண்டு வந்திருப்பதைக் கண்டு அன்புடன் வரவேற்றாள் என்றபொழுது மனிதர்களைவிட அவர்கள் அளிக்கும் வரதட்சணைக்குத்தான் மதிப்பு என்பதுபோல் கதை அமைந்துள்ளது (Vennila, 2014).

இன்றளவும் பெண்கள் மணமகன் வீட்டாருக்கு வரதட்சணை அளிக்கும் வழக்கம் தொடர்கிறது. அவ்வரதட்சணையால் பல பெண்கள் வாழ்விழந்து காணப்படுவதும், பெண்ணை விலைபேசுவதும் நடந்தவண்ணம்தான் உள்ளன. பெண்ணின் இருப்புகள் இச்சிறுகதைகளின் வழி காட்சிப்படுத்தப்படுகின்றன.

## பெண்ணின் எதிர்பார்ப்பு

அனைவரது வாழ்விலும் எதிர்பார்ப்புகள் உண்டு. அனைத்து பெண்களும் எதிர்பார்க்கும் பொதுவான விடயம். கணவன் பிற பெண்ணை காணவும் கூடாது என்பது. அவ்வாறு பிற பெண்களை தன் கணவன் காண்பதாக அறிந்தால் அவள் துவண்டுவிடுவாள் என்பதைக் காட்டும் உபய களத்திரம், கண் திறந்தது சிறுகதைகள் பெண்ணின் இருப்பை வெளிக்கொணர்கின்றன.

திருமணம் செய்து ஏழு வருட காலமான நிலையில் கடைசி மூன்று ஆண்டுகளாக நோய்வாய் பட்டு தன்னை மற்றொரு திருமணம் செய்துகொள்ளச் சொல்லும் மனைவியின் எண்ணத்தை நிறைவேற்றுவதாய் வாக்களித்து கணவன், மதுரையில் சென்று பெண்ணைப் பார்த்தேன் நன்றாக இல்லை. மைசூரில் பெண் உள்ளது என்று கூறி சென்றுவிட்டு அங்கிருந்து கடிதம் எழுதுகிறான். பெண்ணின் பெயர் வீணா. திருமணம் முடிந்தது. நாளை மாலை வருகிறோம் என்று எழுதியனுப்ப, இவள் கூறிதான் அவன் திருமணம் செய்துக்கொண்டான். ஆனாலும் பெண்ணன்றோ அவள். "தந்தியைப் படித்ததும் பங்கஜத்திற்கு அவளையும் அறியாமல் துக்கம் துக்கமாய் வந்தது. நன்றாக விம்மி, அழுது

தீர்த்தாள். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சீ இதென்ன பைத்தியக்காரத்தனம்! நானாகத்தானே அவரைத் தூண்டித் தூண்டி இன்னொரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினேன்! இப்பொழுது ஏன் என் மனம் கிடந்து இப்படித் தவியாய்த் தவித்துத் துன்புறுகிறது?" என்று தன்னைத் தானே தேற்றிக்கொள்கிறாள் (Vennila, 2014).. இவ்வாறு பெண்கள் தாங்களே தன் கணவரை மறுமணம் செய்யக் கூறினாலும் தன் கணவரை பிறருக்கு விட்டுத்தருவது கடினம். அவள் கணவனோ, மைசூரில் வீணா என்ற வீணையை எடுத்துவந்து அவளே உன் சக்களத்தி என, தன் மனைவியிடம் கூறி அவளை மட்டும் ஏற்று வாழ்ந்தான் என கதை முடிவடைகிறது.

தன் கணவன் தன் எதிர் வீட்டிலிருக்கும் ஒரு பெண்ணை பார்ப்பதை சில நாளாக கவனித்து வந்த மனைவி அவனிடம் முழுவதும் கேட்க முடியாமல் திணரிக்கொண்டிருந்தாள். ஒரு நாள் அதன் உண்மைத் தன்மையை அறிந்தவள், நேரிலேயே கண்டும் விட்டாள். அவள் மனமானது மிகவும் வெகுண்டது. "வேணுவுக்கு தன் மேல் அன்பு உண்டென்றால் அவன் வேறு ஒருத்தியை திரும்பிப் பார்ப்பானா? என்ற கேள்வி அவளுக்கு சகிக்க முடியாத துக்கம் மேலிடும்." அவள் தன் கணவன் தன்னை விட்டு வேறு பெண்ணை பார்க்கின்றான் என்பதை விரும்பாதவள் அவ்வீட்டைவிட்டு வெளியில் சென்றுவிட துணிந்தாள். ஆனால் வெளியில் ஆள் நடமாட்டம் இருக்கவே காத்திருந்தாள். அதற்குள் அவளது கணவன், அவளைத் தேட, வீட்டில் இல்லாதது கண்டு, தன் தவறு அவளுக்கு தெரிந்துவிட்டதால்தான் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள் என்றறிந்து அவளைத் தேடினான். அவள் அவன் வருவதை அறிந்து கதவின் பின்னால் நன்கு மறைந்து நிற்க, இருப்பினும் அவள் கணவனால் கண்டறியப்பட்டு, "ஏன் ராதை இங்கு வந்து நிற்கிறாய்? வா, மேலே போவோம் என்று அழைத்தான் மெதுவாக. அவன் குரலில் பரிதாம்ம், மன்னிப்பு இரண்டும் கலந்திருந்ததாக பட்டது ராதைக்கு. பதில் பேசாமல் அவன் பின் மாடிப் படிகளில் கால் வைத்து ஏறினாள்." (Vennila, 2014).

தன் கணவனுக்கு இரண்டாம் திருமணம் செய்துவைத்து, தன் குழந்தையைக் கொஞ்சாமல் மண்ணுக்கு இரையாக்கியவள், அக்குழந்தை இறந்தபோது அக்குழந்தையின் தந்தையாய் அழவேண்டியவன் வேற்றாள் போல் துக்கம் விசாரித்தபோது அக்குழந்தையை ஈன்ற தாயின் மனமானது பட்ட துன்பம் பற்றி விவரிப்பதாக புயல் ஓய்ந்தது எனும் சிறுகதை. "நான் புருஷன் நீ மனைவி எனது கட்டளைப்படி நீ நடக்கவேண்டியது என்ற நினைப்பில் என்ற மனம்போன போக்கிலெல்லாம் உன்னை நடத்தினேன். எதனால்? மனைவி என்பவள் கணவனுடைய அடிமை என்ற ஆவேசத்தில் உனக்கும் ஒரு மனம், அபிலாஷைகள் உணர்ச்சி என்பதிருக்கிறது என் ஞாபகமே இன்றி உன்னை எனது இஷ்டப்படி ஆட்டுவித்தேன்" (Vennila, 2014). என்று ஐந்து ஆண்டுகள் கழித்து வரும் கணவனை மறுமுறைக் கண்டுவிட்டதாகவும், இதற்கு மேல் தனக்கு யாதொன்றும் வேண்டாம் என்றும் கூறிவிடுவதாக கதை நிறைவடைகிறது.

இவ்வாறு பெண்கள் தன் கணவன் தன்னைத் தவிர பிற பெண்களை ஏறெடுத்தும் காணக்கூடாது என்ற மனநிலையில் அவர்களது எதிர்பார்ப்புகள் உள்ளன. சில பெண்கள் தன் கணவனை மற்றொரு திருமணம் செய்துக்கொள்ளக் கூறிடினும் அதை ஏற்காமல் வருத்தத்திற்கு உள்ளாவதாகவும், பிற பெண்களை பார்த்தலைக் கூட விரும்பாதவளாகவும், அது தவறு என்பதும் பெண்களின் மனநிலைகளாக உள்ளன. அனைத்து துறைகளிலும் கால் பதித்த நிலையிலும் பெண்களின் எதிர்பார்ப்பு கணவனது அன்பை மட்டும் எதிர்பார்த்தமைகிறது. ஆண், பெண் இணைந்த இல்வாழ்வில் ஆணினைச் சார்ந்தே பெண்ணின் இருப்பு அமைவதை படம்பிடித்துக் காட்டுகின்றது.

## பெண்களின் துயரம்

திருமணத்திற்கு பிறகு பெண்கள் தன் கணவனைச் சார்ந்து வாழ்கின்றனர். அக்கணவனானவன் அவ்வீட்டிற்குத் தேவையான சாமான்களை சம்பாதித்து வாங்கித்தர, மனைவியானவள் அதனை நிர்வகித்தலே கணவன், மனைவி வாழ்வின் பிரதானமாக அமையும். ஒரு பெண்ணை மணந்தவன் அவளுக்குத் தேவையான எதையும் வாங்கித் தராமல் அவன் தன் வயிற்றை நிரப்பிக்கொண்டு வந்து நிற்க, அவனை நம்பிய அவன் மனைவியின் நிலை மோசமாகிறது. வருடம்தோறும் குழந்தைகள் என ஐந்து குழந்தைக்குத் தாயாகிறாள். பிறகு குடும்பத்தில் வறுமை ஊசலாடுகிறது. தாய் வீட்டில் சேர்க்க

மறுக்கின்றனர். வழி தெரியாது தவித்த வேலையில் ஒருவன் அக்குடும்பத்திற்கு அனுசரணையாக இருக்கிறான். "சிவநாதம் போய் பல மாதங்கள் ஆகிவிட்டன. எச்சுமி மணியனின் அரவணைப்பின்றி வாழ முடியாத நிலை ஏற்பட்டது. காட்டளான மணியன், அவளிடம் பேசும் போதெல்லம் ஓர் அலாதிப் பரிவு காட்டினான். எச்சமியோடு ஒன்றினான். தன்னையே கொடுத்து நன்றிக் கடன் செலுத்தி வரலானாள் எச்சுமி. அவளுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுத்துச் சரியான பாதுகாப்புத் துணையாக அவன் அமைந்தான்." (Vennila, 2014)

எனவே திசை மாறிப்போகிறாள். ஒரு நாள் அவனும் இறந்துவிட, திக்கின்றி தாய் வீடு செல்கிறாள். அவளை ஏற்க மறுக்கின்றனர். குழந்தைகள் மூவர் அங்கேயே தங்கிவிட, இரண்டு குழந்தைகளை அழைத்துச் செல்கிறாள். வறுமையால் அவை இறந்துவிடுகின்றன. பிறகு வேறுவழியின்றி அவள் பாடி அழுதுக்கொண்டிருக்க, அவள் பாட்டை மூலதாரமாகக் கொண்டு வாழ்கிறாள். சமூகம் அவளை விடவில்லை. அவள் சென்று பாட்டு கற்றுத்தரும் இடங்களிலெல்லாம் அவளைப் பற்றி கோள் மூட்டுகின்றனர். அவள் வேறு ஊர் செல்கிறாள். தொடர்கிறது. இறுதியில் அவளது மகன் அவளை வீட்டிற்கு அழைக்க, அவனும் அவனது தந்தைபோல ஊதாரியாக இருப்பதைக் கண்டு தனிமையே சிறந்தது என வந்துவிடுகிறாள். இப்பெண்ணைக் குற்றம் சொல்லும் இச்சமூகம், அவளை பாதுகாத்து அரவணைக்காத கணவனைக் குறைகூறவில்லை. அவளை அவனுக்கு திருமணம் செய்து வைத்த தந்தையைக் குறைகூறவில்லை.

சிறுவயதில் கணவனை இழந்த குழந்தையை வளர்த்து அவனுக்கு திருமணமும் செய்து வைத்தாள். பிறகு ஒரு குழந்தை பிறந்ததும், அவர்களை பிரித்து வைத்தாள். தன் மகளை தன் மருமகள் கையில் போட்டுக்கொண்டால் தன் நிலையை எண்ணி அவர்களுக்குள் பிரிவையும் ஏற்படுத்திவிட்டாள். "சமையலையைத் தாண்டிதான் பூஜை அறைக்குச் செல்ல வேண்டும். அப்பா உள்ளெ வந்தாலே அம்மா வெளியேறி விடுவாள். அப்படி அவள் அடுப்படியில் வேலையாக இருந்தாலும் அப்பா ஏதோ பார்க்கக்கூடாததைப் பார்த்தாற்போல் நகருடீ என்று கர்ஜிப்பார்" (Vennila, 2014) பிறந்த குழந்தை வெண்ணிறமாக இருக்கவே, அவர்களின் செல்லமாக வளர்ந்தது. தாயிடம் அனுமதிக்கப்படவில்லை. பெண்ணும் அவர்கள் வளர்ப்பினால் தாயை வெறுத்தது. ஒரு குறிப்பிட்ட வயதில் தாயிடம் அணுக ஆரம்பித்து கடைசியில் தாய் சிறந்தவளாக தோன்றச்செய்தது. "சதா கோடாலி முடிச்சிலிருக்கும் அம்மாவின் முடி நீளமாக பின்னலாகத் தொங்குகிறது. அதன் தொடக்கத்தில் பந்தாக மல்லிகைப் பூ… கருப்பு, கருப்பு எங்காத்து நெறத்துக்கும், அழகுக்கு இப்படி வாய்ச்சிருக்கு என்று புலம்பும் பாட்டி பேச்சுக்கு நேர் எதிராக அம்மா மிகவும் அழகாகத் தெரிகிறாள்." வயதாக, ஆக தன் மனைவியின் ஆதரவைத் தேடினார். மாமியாரும் மருமகள் தயவை எதிர்பார்க்க நேரிட்டது. "பாட்டி ஸ்ட்ரோக் வந்து படுத்துவிட்டாள். அப்பா எல்லாவற்றிற்கும் அம்மா பேச்சைக் கேட்டுத்தான் செயல்பட்டார். அம்மாவின் முகத்தில் ஒரு பிரகாசமும், கம்பீரமும் வந்திருந்தது." (Vennila, 2014)

என குடும்பத்தின் நிலைகளை அழகுற படம்பிடித்துக் காட்டும் ஆசிரியர், சிறுவயதில் கணவனை இழந்து தன் மகனுக்காக மட்டும் வாழும் தாய், கணவன் வெறுக்கும் மனைவி, தாயை வெறுத்து ஏற்கும் மகள், தந்தையை ஏற்று, பின் வெறுக்கும் மகள் என பல நிலைகளில் பெண்ணிருப்பை படம்பிடித்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

கற்பு பெண்ணிற்கு மட்டும் உரிய சொத்தாக மதிக்கப்படுகிறது அக்காலம் முதல் இக்காலம் வரை. மரபணு காரணமாக தனக்கு பிறந்த குழந்தை குள்ளமாக கருப்பாக இருக்க, மற்றொருவருடன் மனைவியை இணைத்து சந்தேகப்படும் கணவன். தன் மனைவியை சந்தேகத்தால் கொடுமைப்படுத்துகிறார். எவ்வித தவறும் செய்யாத மனைவியோ தன் மகளிடம் ஒரு புகைப்படத்தைக் காட்டி இது என் தாத்தா. உன் தம்பி, குள்ளமாக, அழகில்லாமல் அசிங்கமாக இருக்க இதுவே காரணம் என்று தான் உண்மையில் எவ்வித தவறும் செய்யவில்லை.

"பன்னண்டு வருஷமா உங்கப்பா என்னை ஆத்துக்குள்ளேயே தள்ளி வெச்சுக் கொடுமைப் படுத்திண்டிருக்கார். அவர் சுடுசொல்லாலே என்னைத் தாக்காத நாளே இல்லேங்கலாம். ரமணன் தன் குழந்தை இல்லியோங்கற சந்தேகத்தாலே அவரும் மறுகிண்டே இருக்கார். இப்பப் போய் என் நிரபராதித்தனத்தை நிரூபிக்கறதுனாலே அவர் என்னைக் கொடுமைப் படுத்தினதெல்லாம் இல்லைன்னு

ஆயிடுமா? நெஞ்சிலே அடி விழலேன்னுதான் ஆயிடுமா? என்னை இந்த அளவுக்கு கொடுமைப்படுத்தற உங்கப்பாவுக்குத் தண்டனை என்ன தெரியுமா? ரமணன் தன் குழந்தை இல்லைங்கற நினைப்பாலே வர்ற எரிச்சலும் அருவருப்புந்தான். அந்த எரிச்சலிலேயே அவர் காலம் முழுக்கக் கழியட்டும்! என்றாள் அம்மா." (Vennila, 2014)

பலவித கனவுகளுடன் ஒருவரை மணந்த பெண், அவனது நிலைகளால் பெற்ற குழந்தையில் பெண் குழந்தை சிறுவயதிலேயே காதல் வயப்பட்டு குழந்தையை ஈன்று மாண்டுவிட, ஆண் மகனோ, ஊதாறியாய் சுற்றித்திரிய, கணவனோ அனுசரணையின்றி, இரு குழந்தைகளின் தந்தையாகியும் செயல்பாடுகளில் மாற்றமின்றி திரியும் கணவன் என பெண்ணின் கனவு வாழ்வு பாதித்துவிடுவதாக காட்சிப்படுத்துகிறார் ஆசிரியர்.

"கோபால் எப்படி இருக்கிறாரு? முன்னே மாதிரிதான் இருக்காரா? புரிதலும், அனுசரணையும் அற்று, மலர்கள் உதிர்ந்த மாலையாய்" (Vennila, 2014)

என அவளது தோழி அவளை விசாரிக்கும்போது அவள் கண்ட கனவு எல்லாம் சிதைந்து நிற்கிறாள். இவ்வாறு பெண்கள் கண்ட கனவு அவர்கள் வாழ்வில் கனவாக மாறிவிடுகிறது என்று பெண்ணின் இருப்பை ஆசிரியர் படைத்துள்ளார்.

கணவனை இழந்து நான்கு மகள்களுக்கும் திருமணம் செய்து வைத்தாள். மூத்தமகள் கணவன் பெரிய குடிக்காரன், அடுத்தவள் கணவன் வெளியூரில் வேலை செய்ய மாமியார், நாத்தனார் கொடுமை என நோய்வாய்பட்டு தாய்வீட்டிற்கு வந்துள்ளாள். மூன்றாமவள் இறக்க, கொலையா? தற்கொலையா? எனத் தெரியாதநிலையில் நீதிமன்ற வழக்கு நடைபெற்றுக்கொண்டுள்ளது. கடைசி மகள் திருமணம் செய்து இரண்டு வருடங்களில் அவனை விட்டுவிட்டு வந்துவிட்டாள். அவளை கணவனுடன் சேர்த்துவிட அனைவரும் முயற்சி செய்ய, அவளோ

"என்னை அவன் ஒரு தின்பண்டமாய்ப் பாவித்தான். நினைத்த நேரத்தில் தின்பது, மிச்ச நேரத்தில் சேமித்து வைப்பது என்று. அவனை நினைத்தாலே எனக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது அவன் திருந்த முடியாத ஜந்து. எனக்காக ஏங்குகிறான் என்பதெல்லாம் பசப்பு. நான் வர மறுத்துவிட்டால் விவாகரத்து வாங்கிக் கொண்டு அடுத்த முகூர்த்தத்திலேயே வேறு கல்யாணம் செய்து கொள்வான். அவனால் பணம் இல்லாமல் வாழ முடியும், பொம்பளை இல்லாமல் வாழ முடியாது" (Vennila, 2014)

என கூறிவிட்டாள். அவள் கூறியபடியே விவாகரத்து பெற்றவுடன் அவன் மறுமணம் புரிந்து கொண்டுவிட்டான். இவ்வாறு பெண்ணின் இருப்பு காட்சிப்படுத்தப்படுகின்றன.

பெண்கள் சுதந்திரம் பெற்றாலும் என்று இந்த ஆணாதிக்க சமூகம் அவர்களை இயல்பான மனிதர்களாக எண்ணி வாழ்கிறார்களோ? அன்றே பெண்கள் வாழ்வு நிம்மதியடையும். அதே நேரத்தில் பெண்கள் தங்கள் சுதந்திரங்களை தவறாக உபயோகிக்கவும் கூடாது.

சிறு பெண் பள்ளி முடிந்து தனியே வந்துகொண்டிருந்தபோது அவளிடம் பாம்பு உன் காலில் என்று கூறி அவளாடையை கழட்டச்சொல்ல, அந்நேரத்தில் வந்த ஆட்களைப்பார்த்து ஓடினான் ஒருவன். அன்றிலிருந்து ஊரார்

"பார்ப்பவர்கள் எல்லாம் இந்த பொண்ணையா, என்ன பண்ணினான் என்று கேட்கும்போது பாம்புன்னு சொல்லி பயமுறுத்தினான். என்று சொன்னால் அவநம்பிக்கையோடு ரகசியக்குரலில் ஏதோ பேசிக்கொண்டு சிலபேர் போவது ஏன் என்ற அவளுக்குப் புரியவில்லை." (Vennila, 2014)

சமூகத்தின் பார்வையில் அச்சிறுபெண் குற்றவாளி போல் கருதப்பட்டாள். அவள் வேறு ஊருக்குச் சென்றாலும் அங்கும் வந்து, அச்சிறுபெண்ணிற்கு நடந்ததை, தன் விருப்பப்படி திரித்துகூறி அனைவரும் அவளைப் பற்றி பேசும்படி செய்தனர். எத்தவறும் செய்யாத அச்சிறு பெண்ணும், அவளது தாயும் ஊர்ஊராக சுற்றி மனிதர்களைக் காணவே பயந்தனர் என கதை நிறைவடைகிறது. ஆனால் அப்பெண்ணை பயமுறுத்தியவன் அவ்வூரில் எவ்வித பயமுமின்றி, சுற்றித்திரிகிறான். அவனை இச்சமூகம் கண்டுகொள்ளவில்லை. இவ்வாறு பெண்கள் ஏதோவொரு சூழலில் அறிந்தோ, அறியாமலோ

மாட்டிக்கொண்டாள் அதன் உண்மைத் தன்மையை அறியாமல், வாய்க்கு வந்தவாறு அவளைப் பழித்துப்பேசி, பெண்களின் மனநிலையை பயமுறுத்தும் சூழலே இன்றும் உள்ளன.

## முடிவுரை

குடும்பத்திலும் சமுதாயத்திலும் இருப்புகளை படம்பிடித்து பெண்படைப்பாளர்கள் தங்கள் சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். காலத்தின் சூழலுக்கேற்ப பெண்களின் இருப்புகள் படைக்கப்பட்டுள்ளன. பெண் படைப்பாளர்கள், தானும் பெண் என்ற சூழலிலேயே அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. குடும்பத்தில் தலையாய இடத்தைப் பிடிக்கும் பெண், தன்னைச் சார்ந்தவர்கள், அல்லது தான் சார்ந்து வாழ்கின்றவர்களால் பலவித துன்பங்களுக்கு ஆளாவதை வெளிப்படுத்துவதாக இச்சிறுகதைகள் அமைகின்றன. சமுதாயத்திலும், குடும்பத்திலும் பெண்களின் தேவை உள்ளது. அதை இச்சமூகம் பயன்படுத்திக்கொள்கிறது. அவளுக்குத் தேவையானவற்றைப் பற்றி சிந்திப்பதில்லை என்கின்ற நிலையே பெண்ணின் இருப்பாக அமைந்துள்ளதை பெண் படைப்பாளர்களின் சிறுகதைகளை வரலாற்றுத் தொகுப்பாக்கிய இந்த நூறாண்டு சிறுகதைகளில் காணமுடிகிறது என்பதே இக்கட்டுரையின் முடிவாக அமைந்துள்ளது.

## References


Ambai (1944), Amma Oru Kolai Saidhal, Kalachuvadu Publications, Nagercoil, India

Balasubramaniyan, C. (1986), Puratchi kavinger Paventhar Bharathidasan, Parri Nilayam, Chennai, India

Dasiga Vinayagam Pillai, (1960), Malarum Malaiyum, Parri Nilayam, Chennai, India

Vennila, A. (2014) Meedhamirukkum sorkkal, Meedhamirukkum sorkkal, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License